# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

**தேதி: 03.03.2026**

**OS. No. 61/2023**

**வழக்கு சாட்சி PW.1–பாலசுப்பிரமணி , த/பெ. பழனிச்சாமி**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் வழக்கு தாக்கல் செய்துள்ள திருமுருகன் அவரது அப்பா காலம் முதல் வடகவுஞ்சியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது வீட்டை ஒட்டியுள்ள இடம் திருமுருகன் உடையது என்றால் சரிதான், என் வீட்டை ஒட்டி சுவர் உள்ளது. சுவருக்கு அடுத்தாற்போல் திருமுருகன் வீடு உள்ளது. 1ம் பிரதிவாதி ராமச்சந்திரனின் தகப்பனார் சுப்பையா தாவா சொத்து மேற்கு பகுதியில் அவரது வீட்டைச் சுற்றி கல்கோட்டை எழுப்பி அவர் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். கல்கோட்டைக்கு உள்பகுதியில் இடம் விட்டு, ராமச்சந்திரனின் குடும்பத்தார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் கல்கோட்டை ராமச்சந்திரன் குடும்பத்தாருடையது. ஆனால் அதன் உள்ளே இருக்கும் ஒதுக்கப்பட்ட பகுதி எங்களுக்கு சொந்தமானதாகும். மீரா மரம் குறித்து எனக்குத் தெரியுமா என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. மீரா மரமானது 100 வருடங்கள் ஆனால் அது இத்துபோகானது என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. மீரா மரத்தைக்கொண்டு பிரதிவாதிகள் அந்த கோட்டைக்கு முட்டுக்கொடுத்து அதை பராமரித்து வருகிறார்கள் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது.

சுப்பையா வகையறாவின் வாரிசுகளான சகோதர, சகோதரிகளிடம் 1ம் பிரதிவாதி இடத்தை கிரையம் பெற்று தாவா சொத்தை அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் அவரது அண்ணன், தம்பிச் சொத்தை வாங்கி அனுபவம் செய்து வருகிறார். எனது அப்பா பெயர் பழனிச்சாமி, எனது தாத்தா பெயர்

பூம்பாறையாண்டி ஆசாரி ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கோடிட்டு காட்டப்பட்டுள்ள இடம் எங்களுக்கு பட்டா மூலம் வழங்கப்பட்ட இடம் என்றால் சரிதான். கல்கோட்டைக்கு அடுத்தாற்போல் உள்ள காலியிடம் பிரதிவாதிகள் இடம் என்றால் சரியல்ல. ஆதிகாலம் முதல் தாவா சொத்தை பிரதிவாதிகள் அ னுபவம் செய்து வருவதால் 2 பிரதிவாதிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அவர்கள் இடத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது, ஆனால் எங்கள் இடத்திற்குள் வரக்கூடாது என்றுதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எங்களுக்கு வழங்கப்பட்ட பட்டா இடத்திற்கு மேல் எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, மிச்ச இடம் உள்ளது. தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் 2 சென்ட் நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வெளியூரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி முதியவர் என்பதால் அவரை மிரட்டி இடத்தை அபகரிக்க முயற்சி மேற்கொள்கிறேன் என்றால் சரியல்ல, அவர்கள்தான் அபகரிக்க முயற்சி செய்கிறார்கள். இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.03 18:55:08 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.